**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.33/2017**

பெயர்-திரு. வெங்கடேசன் நாள்.10.11.2025

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுதப்படிக்க தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், வாதிகளின் பூமியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கை தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தமானது எனவும், தாவா சொத்தின் சுவாதீனத்தை மீட்டு கொடுக்கக் கோரியும், தாவா சொத்தின் நான்குபுற எல்லைகளை நிர்ணயம் செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், தெரியாது. பொன்னுசாமியின் பூமி எனது சொத்தின் மேபுறத்தில் உள்ளது என்றால், சரிதான். 3-ம் வாதி வடிவேலுவின் பூமி எனது சொத்திற்கு அடுத்துள்ள தடத்திற்கும் வடபுறம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி தடத்தின் அகலம் 9 1/2 லிங்க்ஸ், நீளம் எனக்கு தெரியாது. 9 1/2 லிங்க்ஸ் எத்தனை அடி என எனக்கு தெரியாது. எனது சொந்த ஊர் கெம்பநாய்க்கன்பாளையம். நான் தற்போது கணக்கம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனது பிரமாணபத்திரிக்கையில் கணக்கம்பாளையம் முகவரியை கொடுக்கவில்லை என்றால், சரிதான். எத்தனை வருடங்களாக கணக்கம்பாளையத்தில் வசித்து வருகிறேன் என்றால், சுமார் 6, 7 ஆண்டுகளாக இருக்கிறேன். தாவா சொத்து 2006-ல் கிரையம் பெற்றேன்.

2) நான் கிரையம் பெறும் முன்பு, தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்ற ஆவணத்தை பார்த்துள்ளீர்களா என்றால், பார்த்துள்ளேன். முத்தாயாளின் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். தாவா பூமியை அளந்து பார்த்து வாங்குனீர்களா என்றால், இல்லை. தாவா சொத்தை விலைக்கு வாங்கும் முன்பு வில்லங்க சான்றிதழை எடுத்துப் பார்த்தீர்களா என்றால், 2006-ல் பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. முத்தாயாளுக்கு மேற்படி சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என நேரடியாக எனக்கு தெரியாது. முத்தாயாள் செவலையப்பனிடம் இருந்து கிரையம் வாங்கியதாக கேள்விப்பட்டேன். கெம்பநாய்க்கன்பாளையத்தில், கொடிக்கால் தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். பிறந்த இடம் வேறு, வளர்ந்த இடம் வேறு. எனது சொந்த ஊர் கெம்பநாய்க்கன்பாளையம். செவலையப்பன் பங்கை முத்தாயாள் வாங்கியுள்ளார் என்பதும், ராமபண்டாரத்தின் பங்கை

வாதிகள் வாங்கியுள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும். வாதிகளின் ஆவணத்தை பார்த்ததில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-4 ஆவணத்தில், ராமபண்டாரத்திற்கு பாத்தியப்பட்ட 9 லிங்க்ஸ் அகலமுள்ள கிழமேல் தடத்திற்கும் தெற்கு என செக்குபந்தி கண்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 செவலையப்பனின் கிரைய ஆவணத்தில், பொதுவில் 2.04 செண்ட் பூமி என்று விஸ்தீரணம் கண்டுள்ளது என்றால், சரிதான். ரீ.சர்வே எண்.127 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.எண்.154-ல் 0.68 செண்ட் பூமியும், க.ச.எண்.155-ல் 068 செண்ட் பூமியும், க.ச.எண்.158-ல் 068 பூமி எனவும், ஆக மொத்தம் 2.04 என விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ-2 முத்தாயாளின் கிரைய ஆவணத்தில் க.ச.எண்.127, விஸ்தீரணம் 2.15 எனவும், செக்குபந்தி கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3) பி.வா.சா.ஆ-1 செவலையப்பனுக்கு பாத்தியப்பட்டது 2.04 என்றால், எனது பாட்டி முத்தாயாள் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள 2.15 என குறிப்பிடப்பட்டுள்ளது விவரம் எனக்கு தெரியும், அதற்கான காரணம் என்னவென்றால், ராமபண்டாரத்திற்கு தடம் வேண்டும் என்பதால், செவலையப்பன் அவருடைய சொத்தில் வடபுறத்தில் 5 1/2 செண்ட் தடத்திற்கு ஒதுக்கி கொடுத்துவிட்டு, அதற்கு ஈடாக ராமபண்டாரத்தின் அனுபவத்தில் இருந்த 11 1/2 செண்ட் இடத்தை செவலையப்பன் வாங்கி கொண்டார். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது பாட்டி முத்தாயாள் சொல்லி தெரியும். எனது பாட்டி முத்தாயாள் உயிருடன் இல்லை. முத்தாயாளின் பத்திரத்தில் மேற்சொன்ன விவரங்களான வண்டித்தடம் குறித்த பரிவர்த்தனை எழுதப்படவில்லை என்றால், சரிதான். வண்டித்தடத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல், ராமபண்டாரத்திற்கு சொந்தமான 11 1/2 செண்ட் பூமியை செவலையப்பனுக்கு கொடுத்ததாக முத்தாயாளின் கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளாரா என்றால், இல்லை. தாவா சொத்து குறித்து நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்தபோது, நான் அங்கு இல்லை. எனது தரப்பில் யாரேனும் இருந்தார்களா என்றால், எனக்கு தெரியாது.

4) வண்டித்தடம் தற்போது ஸ்தலத்தில் உள்ளதா என்றால், இல்லை. அழித்து விட்டார்கள். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் ஆரஞ்ச் வண்ணமிட்ட பகுதி என்னுடையது இடமாகும். அதில் காட்டப்பட்டுள்ள வீடு டேம் ரோட்டை ஒட்டியவாறு இல்லாமல், காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது வீடு தெற்கு பார்த்தவாறு உள்ளது. சாட்சி தற்போது ஆணையர் வழக்கு சொத்தில் பார்வையிட வந்தபோது, நான் வழக்கு சொத்தில் இருந்ததாக கூறுகிறார். ஒருமுறைதான் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்தார். நான் சொல்வது போல், ஒரு முறை வரவில்லை, நீதிமன்ற ஆணையர் இரண்டு முறை வந்துள்ளார்கள் என்றால், சரியல்ல. வழக்கு சொத்து

முழுவதையும் நீதிமன்ற ஆணையர் அளந்தார். என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.3-ல் தாவா அயிட்டம் 3, 4 சொத்துக்களைப் பொறுத்து, அளவீடு குழப்பமாக இருப்பதாகவும், அளக்க முடியவில்லை என்றும், சர்வேயர் அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் 3 அயிட்டச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எனது தரப்பில், ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆணையர் அறிக்கையில், சர்வேயர் கொடுத்துள்ள விவரம் மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஆகியவை எனக்கு தெரியாது.

5) எனது பூமி 3-ம் வாதி வடிவேலுவின் பூமிக்கு 1 அடி தாழ்வாக உள்ளது என்றால், சரியல்ல. சில இடங்களில் தாழ்வாகவும், சில இடங்களில் உயரமாகவும் இருக்கும். எங்கள் பூமியின் வடமேற்கில் தாழ்வாகவும், கிழபுறம் உயரமாகவும், மத்தியிலும், கிழபுறமும் உயரமாகவும் உள்ளது. தாவா சொத்து மொத்தமாக ரோட்டிலிருந்து பார்வையிடுகையில், எந்த திசையில் சரிவாகவும், தாழ்வாகவும் உள்ளது என்றால், தென்மேற்கு பகுதி சற்று சாய்வாக இருக்கும். நான் சொல்வது போல் தென்மேற்கில் சரிவாக இல்லை என்றும், கிழபுறத்தில் இருந்து மேபுறத்தில் சரிவாகவும் உள்ளது என்றால் சரியல்ல. 3-ம் வாதியின் பூமி மத்தியில் உயரமாகவும், கிழபுறமும், மேபுறமும் சரிவாக உள்ளது. செவலையப்பனிடம் இருந்து ராமபண்டாரம் வாங்கியதாக சொல்லப்படும் 5 1/2 செண்ட் தடத்தில்தான் 1, 2 வாதிகள் சென்றுவருகிறார்களா என்றால், ஆமாம். தற்போது தடம் இல்லை. மேற்படி தடத்தை 2017-ல் நாங்கள் அழித்துவிட்டதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வாதிகளின் தடத்தை அழித்து, 3-ம் வாதியின் இடத்திற்குள் மின்வேலி அமைப்பதால்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் முன்பு, தடத்தை அழித்துவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. காவல்துறையின் அறிவுறுத்தலின் பெயரில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

6) எனது பூமிக்கும், 3-ம் வாதி வடிவேலுவின் பூமிக்கும் இடையில் பொழி உள்ளதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. எனது பூமிக்கும், 3-ம் வாதியின் பூமிக்கும் நிரந்தரமாக பொழி உள்ளதா என்றால், உள்ளது. நிரந்தர பொழி மேடுபள்ளமாக உள்ளது. கல்கட்டிட பொழி எதுவும் இல்லை. நான் சொல்வது போல் நிரந்தர பொழி எதுவும் இல்லை. வரப்புதான் உள்ளது என்றால், சரியல்ல. வரப்பினை அவரவர்கள் உபயோகத்திற்கு மாற்றிக்கொள்ளுமாறு உள்ளது என்றால், சரியல்ல. வாதிகளின் ஆவணத்தின் படி அவர்களின் எல்லையினை நிர்ணயம் செய்து கொள்ள, எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால், இல்லை. 1, 2 வாதிகளின் பெயரில் உள்ள வா.சா.ஆ.4 கிரைய ஆவணப்படி எல்லையை நிர்ணயம் செய்து கொள்ள ஆட்சேபணை

உள்ளதா என்றால், உண்டு. என்ன ஆட்சேபனை என்றால், தென்புற எல்லையாக முத்தாயாள் பூமி காட்டப்பட்டுள்ளது தவறு. தென்புறமாக 9 லிங்க்ஸ் தடம் உள்ளது. அதை காட்டவில்லை. 9 லிங்க்ஸ் தடம் காட்டாததால், 1, 2 வாதிகளின் கிரைய ஆவணம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதனால், வா.சா.ஆ-4 ஆவணத்தைப் பொறுத்து ஆட்சேபனை தெரிவிக்க முடியாது என்றால், சரியல்ல.

7) வா.சா.ஆ-1 ஆவணத்தின் சொத்து விவரத்தில், க.ச.எண்.127/1 ஏ, வண்டிப்பாதைக்கும் மேற்கு, சுப்பிரமணயிம் பங்குக்கும் வடக்கு, பொன்னுசாமி பங்குக்கும் கிழக்கு, செவலையப்பன் பூமிக்கும் தெற்கு, இதன் மத்தியில் பு.ஏ.2 எனவும், வண்டிப்பாதைக்கும், முத்தாயாள் பங்குக்கும் மேற்கு, தங்கவேல் பங்குக்கும் வடக்கு, கருப்பகவுண்டர் பூமிக்கும் தெற்கு இதன் மத்தியில் பு.ஏ.2.04 சொத்து மற்றும், க.ச.எண்.127/3-ல் 0.11 ஆக காலைகள் இரண்டிலும் சேர்ந்து 4.15 விஸ்தீரணமுள்ள பூமி மற்றும் 0.02 பு.ஏ அமைந்துள்ள வண்டிப்பாதையை உபயோகித்துக் கொள்ளும் உரிமையும் என்று கண்டுள்ளது. அதைப் பொறுத்து அவர்களின் எல்லைகளை நிர்ணயம் செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால், ஆமாம். ஆட்சேபனை உள்ளது. என்ன ஆட்சேபணை என்றால், ராமபண்டாரம் 11 செண்ட் பூமியை செவலையப்பனுக்கு கொடுத்ததை மறைத்து, செக்குபந்தி போடப்பட்டுள்ளது. அதனால், ஆட்சேபணை தெரிவிக்கிறேன். செவலையப்பனுக்கு கொடுத்தாக ஆவணங்கள் தாக்கல் செய்யாததால், எனது ஆட்சேபணை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால், சரியல்ல. மேலும், அந்த ஆவணத்தை செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்காததால், தற்போது ஆட்சேபனை செய்ய முடியாது என்றால், சரியல்லல.

8) வழக்கில் நான் என்ன எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால், நாங்கள் பூமியை ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனவும், முத்தாயாளிடம் இருந்து வாங்கிய பூமியை அனுபவித்து வருகிறோம் என்றும் எதிர்வாதம் செய்து வருகிறோம். பொதுவாக ஒரு நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தைத்தான் மற்றவர்களுக்கு விற்க முடியும் என்றால், சரிதான். ஒரு நபரிடம் இருந்து, இடம் வாங்கினாலோ, விற்றாலோ ஆவணம் கண்டு எழுதப்பட்டிருக்கும் என்றால், சரிதான். எனது பூமியில் அளந்து அத்து செய்துகொள்ள ஆட்சேபணை உள்ளதா என்றால், இல்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், இல்லை. நான் அனுபவத்தில் இருப்பதால், அவசியம் இல்லை. நான் அதிகமான சுவாதீனத்தில் இருப்பதால்தான் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் செல்ல தயங்குகிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு என்னுடையதுதான். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது வீட்டிற்கு பின்புறம் தடம் உள்ளதா

என்றால், இல்லை. எனது வீட்டிற்கு பின்புறம் உள்ளது எனது இடமாகும். வீட்டிற்கு பின்புறம் உள்ள இடம்தான் வண்டித்தடம் என்றால், சரியல்ல.

9) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்னுடைய வடபுற அத்திற்கு வீடு கட்டப்பட்டுள்ளதாக, கட்டிட அனுமதி உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. பின்புறம் இடம் விட்டு கட்டியுள்ளேன். ராமபண்டாரம் ஒதுக்கியதாக சொல்லப்படும் வண்டித்தடத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், எனக்கு தெரியாது. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சரியானது என்றும், நான் அவர்களின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து, மின் கம்பி போட வந்ததால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. நான் கோரியுள்ள எதிரிடை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல. வாதிகளின் வழக்கு தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.10 14:41:02 +0530

District Munsif